# இயேசு ஜீவிக்கிறார்

*சந்தோஷமான செய்தியை உனக்குள்ளே அடக்கி வைத்துக்கொள்ள முடியாமல் சீக்கிரமாகப் போய்ப் பிறரிடம் சொல்லத் துடித்தது உண்டா? மரித்த இயேசு உயிர்த்துவிட்டார் என்பதை மகதலேனா மரியாள் முதலாவது அறிந்துகொண்டாள். எனவே, அச்செய்தியை உலகத்திற்குச் சொல்லாமல் அடக்கிக்கொண்டிருக்க அவளால் முடியவில்லை.*

வெள்ளிக்கிழமையன்று மாலை இயேசு மரித்தார்; சனிக்கிழமை ஓய்வுநாள். இயேசு இல்லா அந்த ஓய்வு நாள் இயேசுவின் சீடர்களுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. வெள்ளிக்கிழமை மாலை சூரியமறைவிற்குச் சில மணி நேரத்திற்குச் சற்று முன்னர்தாம் இயேசு மரித்தார். அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவருடைய கல்லறையில்தான் மிகுந்த மன வேதனையோடு இயேசுவைச் சீடர்கள் அடக்கம்செய்தனர். பிறகு ஓய்வுநாளை ஆசரித்தனர்.

மகதலேனா மரியாளும், மற்றப் பெண்களும் கல்லறைக்கு வந்தார்கள். இயேசுவின் உடலில் பூச வாசனைத் தைலங்களைக் கொண்டுவந்திருந்தார்கள். ஆனால், இயேசுவின் கல்லறையின்மேல் வைக்கப்பட்டிருந்த அந்தக் கல் தனியே தள்ளிக் கிடந்தது. “நமக்காக அந்தப் பெரிய கல்லை யார் புரட்டி இருப்பார்கள்?” என்று அந்தப் பெண்கள் ஆச்சரியப்பட்டார்கள். இவர்களுக்கு முன்பாகவே வானத்தில் இருந்து ஒரு தூதன் கீழிறங்கி வந்திருந்தான்; கல்லறையின் மேலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளினான். பிதாவின் நாமத்தில் இயேசு தம் ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படியாக இயேசுவை அழைத்தான். ஆனாலும், இவை எதுவும் அப்பெண்களுக்குத் தெரியாது.



திறந்திருந்த கல்லறையைப் பார்த்து திகைத்து நின்றார்கள். ஆனால்,தைரியத்துடன் கல்லறையினுள் எட்டிப் பார்த்தார்கள். கல்லறையில் இயேசுவைக் காணவில்லை. அப்போது ஒரு

## மனன வசனம்

**அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (என்றார்). மாற்கு 16:15.**

தூதன் அவர்களிடம், ''பயப்படாதீர்கள்; இயேசுவையே நீங்கள் தேடுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அவர் இங்கே இல்லை; தாம் சொல்லியபடியே நம் இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார். சீக்கிரமாகப் போய் இதைச் சீடர்களிடம் சொல்லுங்கள். அவர் கலிலேயாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார். நீங்கள் அங்கே இயேசுவைப் பார்க்கலாம்'' என்று கூறினான்.

அந்தப் பெண்கள் சந்தேகமும், ஆச்சரியமும் அடைந்தார்கள். ஒரு சில நாட்களுக்குள் என்னவெல்லாம் நடந்து விட்டது!

இரட்சகர் இயேசுவோடு ஊழியம் செய்த நாட்கள் நினைவுக்கு வந்தன. ஆஹா! அந்த நாட்கள் எத்தனைச் சந்தோஷமான நாட்களாக இருந்தன. ஓடியும் நடந்தும், வெயிலென்றும் மழையென்றும் பாராமல் அநேக ஊர்களுக்குச் சென்றார்கள். தேவனுடைய அன்பைப்பற்றி மக்களுக்கு இயேசு அருமையாகப் போதிப்பதை மிக அருகில் இருந்து கேட்டு, தேவனை மகிமைப்படுத்தினதையும் நினைத்துப் பெருமூச்சு விட்டனர். அத்தகைய அன்பான தேவனைக் காண அவர்கள் உள்ளம் ஏங்கியது.

தூதன் தங்களிடம் சொன்ன செய்தியைச் சீடர்களிடம் கூற அந்தப் பெண்கள் ஓடினார்கள்; அவர்கள் பயத்தோடும் அதே சமயம் மிகுந்த சந்தோஷத்துடனும் ஓடினார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

அவர்கள் அப்படி ஓடும்போது அவர்கள் கொண்டு வந்த தைலங்கள் கூடச் சிந்தியிருக்கலாம். ஆம்! இயேசுவைப் பற்றிக் கூறவும், இயேசுவைப் பார்க்கவும் மிகுந்த ஆவலோடு ஓடினார்கள். ஊருக்குள்ளேயும் அப்படியேதான் ஓடினார்கள். அவர்களுடைய ஓட்டத்தின் வேகம் சற்றேனும் குறையவில்லை. யாரைப் பற்றியும் கவலைப்படாமல், வெட்கப்படா



## செய்தி

**இயேசு இன்றும் ஜீவிக்கிறார் என்று பிறரிடம் நாம் சொல்லும்போது நாம் தேவனுக்குச் சேவைசெய்கிறோம்**

மல் ஓடினார்கள்.

அவ்வாறு இயேசுவைப் பற்றிய நினைவோடு ஓடிய அவர்களை வழியில் யார் நிறுத்தினாலும் நிச்சயமாக அவர்கள் நின்றிருக்கவே மாட்டார்கள்.

அன்று உயிர்த்த நம் இயேசு இன்றும் ஜீவிக்கிறார்.

“நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப்போய்,சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்; பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்” என்றார்.

அன்பே, இயேசுவின் அன்பை உலகத்திற்குச் சொல்வாயா? இயேசு நமக்காகச் செய்த தியாகம் யாராலும் செய்ய முடியாத தியாகம். நாம் பாவிகளாக இருப்பினும் இயேசு நம்மை மிகவும் நேசிக்கிறார்.

### செய்முறை

*கீழே கானும் கேள்விகளுக்கான பதிலைக் கோடுகளில் எழுதுக. கேள்வியின் அருகே அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை முறைப் படுத்தினால் விடை கிடைக்கும்*

1. இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்று தூதன் சொன்னபோது, மரியாளுக்கு எப்படி இருந்தது? (மா ந் ஷ ச தோ க)

____________________

2. இயேசு எங்கே போய்க் கொண்டிருப்பதாக தூதன் சொன்னான்? (யா லே க லி)

____________________

3. மரித்தோரிலிருந்து எழும்புதல் என்பதற்கான இன்னொரு பெயர் எது? (யி ர் உ த் ழு தெ ல் த)

____________________